முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 5 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேல் முருகன் | வயது | : | 58 |
| தந்தை/ கணவர் பெயர் | : | அருணாச்சலம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 13.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் தற்போது வடலூரில் வசித்து வருகிறேன். லாரி புக்கிங் ஆபிஸிசில் வேலை செய்கிறேன். டிப்ளமோ படித்துள்ளேன். 04.03.2011 அன்று வடலூர் சபை பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த போது வடலூர் இன்ஸ்பெக்டர் முரளி என்பவர் என்னை ஸ்டேஷன் வரை வர வேண்டும் என்று சொல்லி அழைத்து சென்றார். அன்று மாலை 4.00– 4.30 மணியளவில் என்னை வடலூர் ஸ்டேஷன் உள்ளே உட்கார சொன்னார்கள். செந்தில் இறந்த விஷயமாக என்னை விசாரித்தார்கள். அங்கு இறந்து போன சுரேஷ் என்பவரும், சங்கீதா என்பவரும் இருந்தார்கள். கொஞ்ச நேரம் கழித்து கையெழுத்து வாங்கினார்கள், கைரேகை வைக்க சொன்னார்கள்.

அங்கு கும்பலாக இருந்தது. ஆஜர் 5 எதிரிகள் அங்கிருந்தார்களா என்று தெரியவில்லை. எங்கள் மூவரையும் வேனில் அழைத்துக்கொண்டு கடலூர் JM அம்மாவிடம் அழைத்து சென்றார்கள். அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவர் விசாரித்து எங்கள் மூவரையும் ஜெயிலுக்கு அழைத்து சென்றார்கள். யாரும் என்னிம் ஒன்றாக போகும் போது தங்களை போலிஸ் அடித்ததாக என்னிடம் எதுவும் சொல்லவில்லை. என்னை முதலில் பரிசோதனை செய்து சிறைக்குள் அனுப்பிவிட்டார்கள். அதன் பிறகு என்ன நடந்தது என்று தெரியாது. ஆர்.டி.ஓ மற்றும் JM 3 கடலூர் அம்மா என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

சுரேஷ் என்பவரை நெய்வேலி டி.எஸ்.பி வடலூர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் ஆமாம். வடலூர் காவல் நிலையத்திலிருந்து நீதிபதியிடம் வந்து அதன் பிறகு சிறைக்கு அழைத்து சென்ற இடைப்பட்ட நேரத்தில் சங்கீதா, சுரேஷ் மற்றும் என்னை யாரும் எந்த வித தொந்தரவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

3, 4 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார்.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 6 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவராமன் | வயது | : | 65 |
| தந்தை/ கணவர் பெயர் | : | ஜெயராமன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 13.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் தற்போது வடலூரில் வசித்து வருகிறேன். ஆயில் கடை வைத்துள்ளேன். 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இறந்து போன சுரேஷ் எனது மச்சான். 04.03.2011 அன்று சுரேஷை ஸ்டேஷனுக்கு அழைத்து சென்றிருப்பதாக சொன்னார்கள். நான் அன்று மாலை 6.00 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். அப்போது சுரேஷ் காவல் நிலையத்திற்குள் உட்கார்ந்திருந்தார். அவர் உடம்பில் காயங்கள் இருந்ததா என்று நான் பார்க்கவில்லை, என்னிடம் சுரேஷ் பேசவில்லை. நான் என்ன ஏது என்று கேட்டதற்கு செந்தில் குமார் வழக்கு விஷயமாக விசாரிக்க அழைத்து வந்ததாக சொன்னார்கள். பிறகு சுரேஷ்க்கும் செந்திலுக்கும் டீக்கடையில் பிரச்சனை ஏற்பட்டது சம்பந்தமாக சொன்னார்கள்.

அது சம்பந்தமாக இறந்து போன சுரேஷ் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. ஆஜர் 5 எதிரிகள் காவல் நிலையத்தில் அப்போது இருந்தார்களா என்றால் இல்லை. ஆர்.டி.ஓ. என்னை விசாரித்தார். நீதிமன்றத்திலும் விசாரித்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

இறந்து போன சுரேஷ்க்கு அடிக்கடி நெஞ்சு வலி ஏற்படும் என்றால் ஆமாம். சுரேஷ்க்கு மது அருந்தும் பழக்கம் உண்டு. மாலை 4.00–4.30 மணிக்கு போலிசார் சுரேஷை கூப்பிட்டு சென்றதாக தகவல் கிடைத்தது. நான் 6.00 மணிக்கு மேல் தான் காவல் நிலையம் சென்று சுரேஷை பார்த்தேன்.

3, 4 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார்.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 7 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகாலட்சுமி | வயது | : | 52 |
| தந்தை/ கணவர் பெயர் | : | சுரேஷ் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 13.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் தற்போது வடலூாரில் வசித்து வருகிறேன். நான் வீட்டு வேலை செய்து வருகிறேன். நான் படிக்கவில்லை. இறந்து போன சுரேஷ் என் கணவர். 2011 ஆம் ஆண்டு டீக்குடிக்க டீ கடைக்கு சென்ற போது என் கணவருடன் சண்டையானதாக அக்கம் பக்கத்தினர் சொன்னார்கள். 2 நாட்கள் கழித்து வடலூர் போலிசார் என் வீட்டிற்கு வந்து என் கணவரை அழைத்து சென்றார்கள். என் நாத்தனாரின் கணவர் காவல் நிலைய சென்று பார்த்துவிட்டு வருவதாக என்னிடம் சொல்லிவிட்டு சென்றார். பார்த்துவிட்டு வந்து என் கணவர் வடலூர் காவல் நிலையத்தில் நன்றாக இருப்பதாக சொன்னார். என் கணவருக்கு அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போகும்.

என் நாத்தனாரின் கணவரிடன் என் கணவர் சுரேஷ் எந்த தகவலும் சொல்லி அனுப்பவில்லை. மறுநாள் 05.03.2011 அன்று என் கணவர் இறந்துவிட்டதாக என் நாத்தனாரின் கணவர் என்னிடம் சொன்னார். இது சம்பந்தமாக ஆர்.டி.ஓ, மற்றும் நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தார்கள். என் கணவர் ஹார்ட் அட்டாக்கில் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

தற்போது என்னிடம் காட்டப்படும வாக்குமூலம் நான் நீதித்துறை நடுவர் எண் 2 கடலூர் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கியது அது எ.த.சா.ஆ.2 ஆகும்.

**3, 4 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார் மேலும் குறுக்கு விசாரணை –**

என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததால் அடிக்கடி உடல் நிலை சரியில்லாமல் போகும் என்றால் சரிதான்.